நாள்: 12.1.2020

செ.வெ.எண்: 19

# பத்திரிக்கை செய்தி

சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் குழந்தைகள் இல்லங்களில் உள்ள மாணவ/மாணவிகளிடையே விளையாட்டுப்போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் சனி மற்றும் ஞாயிறு இண்டு நாட்கள் தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டிகளில் திண்டுக்கல், திருச்சி புதுக்கோட்டை சிவகங்கை, தஞ்சாவூர், அரியலூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் குழந்தைகள் இல்லத்தினை சேர்ந்த 900 குழந்தைகள் போட்டியில் கலந்துகொண்டனர். இதில் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 100 மீ, 200மீ, 400 மீ ஒட்டப்பந்தயம் 400 மீ தொடர் ஒட்டம். நீளம் தாண்டுதல் உயரம் தாண்டுதல், பூப்பந்து, கை பந்து கோகோ, கபடி உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நடந்தது. பரிசளிப்பு விழாவிற்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு.ம. கோவிந்தராவ் அவர்கள் தலைமை தாங்கியும் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கியும் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் நா.நடராசன் வரவேற்றார். மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலர் திருமதி.ப.சுதா அவர்கள் முன்னிலை வகித்து பேசினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினரும் குழந்தைகள் நலக்குழு தலைவருமான திருமதி சி. திலகவதி மற்றும் குழந்தைகள் நலக்குழு உறுப்பினர்கள் மாவட்ட விளையாட்டு அலுவலர் பாபு ஆகியோர் கலந்துகொண்டனர். குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளர் திரு.சௌந்தரராஜன் நன்றியுரை கூறினார்.